# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை, வருடம் IV - 2018

## மனித உரிமைகள் சட்டம்

(மூன்று மணித்தியாலங்கள்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

**முதலாவது** வினாவையும் ஏனைய எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து **நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடைதருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

1. ரோவானா என்ற அரசின் தென் மாகாண விவசாயிகள் நிலவுகின்றதொரு வரட்சி காரணமாக விவசாயத்தை இடைநிறுத்துவதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த வரட்சி பல ஆண்டுகளாகத் தொடர்ந்திருப்பதுடன், இக்காலப்பகுதியில் பிறக்கின்ற குழந்தைகள் குறையூட்டமுடைய பிள்ளைகளாகக் காணப்படுகின்றனர். வருமானக் குறைவு காரணமாக, தமது குழந்தைகளுக்கு அவசியமான உணவு மற்றும் ஆரோக்கியக் கவனிப்பை வழங்க முடியாதவர்களாக விவசாயிகள் காணப்படுகின்றனர். நிவாரணம் பெறுவதற்காக விவசாயிகள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு ஆதாரமான ஆவணங்கள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படாமையினால், அரசாங்கத்தினது நிவாரண நடவடிக்கைகளின் அமுலாக்கமானது மிகவும் தாமதமாக உள்ளன.

   இதனிடையே, சமூக ஊடகங்களில் தொடர்ந்துவருகின்ற பிரச்சாரம் காரணமாக, 'சுகா' என்ற சிறுபான்மையின சமூகத்தவருக்குச் சொந்தமான வியாபார நிறுவனங்களைப் பகிஷ்கரிப்பதற்கு, ரோவானாவினது 'முகா' என்ற பெரும்பான்மையின சமூகத்தின் சில அங்கத்தவர்கள் தீர்மானிக்கின்றனர். சுகா சமூகத்தவரின் கோயில்களில் செய்யப்படுகின்ற மிருக-பலி நடைமுறையானது நாட்டின் பாரம்பரியங்களுக்கு எதிரானதாகும் என்று முகா சாட்டுதல்செய்கின்றது. சுகா இனத்தவர்கள் அவர்களது கிராமங்களிலிருந்து வெளியேற்றப்படுதல் வேண்டுமென, ரோவானாவின் 'தூய கலாசாரம்' என்ற கருத்தை ஆதரித்துப் பேசுபவரான முகா இனப் பூர்வீகத்தையுடைய தனிநபரொருவர் சமயத் திருவிழா ஒன்றின்போது முகா ஆண்கள் அனைவரையும் தூண்டுகின்ற கிளர்ச்சியூட்டும் உரையொன்றை நிகழ்த்துகின்றார். ஒரு சில மணிநேரத்தில், சுகா இனத்தவரின் வீடுகள் மற்றும் வியாபாரத் தளங்கள் என்பவற்றுக்கு எதிரான தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதென அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அவசரகால நிலைமையைப் பிரகடனஞ்செய்வதுடன், அனைத்து சமூக ஊடக தளமேடைகளை அணுகுவதனையும் தடைசெய்தும் ரோவானாவினது அரசாங்கமானது பதில் நடவடிக்கை எடுக்கின்றது. ஒரு சில வாரங்களில், தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு மற்றும் ஒழுக்கம் என்பவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற வகையில் சமூக ஊடக தளமேடைகளானவை துஷ்பிரயோகஞ் செய்யப்படாமையினை உறுதிசெய்கின்ற பணிப்பாணை கொண்ட 'சமூக ஊடக அதிகாரசபை' என்ற அமைப்பொன்றினைத் தாபிப்பதற்கான சட்டமூலமொன்றையும் பாராளுமன்றத்தில் முன்வைத்துள்ளது.

ரோவானாவின் கிழக்கு மாகாணத்தில், அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடுவதற்கு ஆயுதக்குழுவொன்று முயற்சிக்கின்றது. அதியுயர் பாதுகாப்பு வலயம் என்பதாகப் பிரகடனஞ்செய்து அரசாங்கத்தினால் எடுத்துக்கொள்ளப்பட்ட தமது காணிகளைத் திருப்பித்தருமாறு பெண்கள் கோருகின்றனர். அவற்றில் சில காணித்துண்டுகளை ஏற்றுமதிச் செயன்முறை வலயமொன்றைத் தாபிப்பதற்கென வெளிநாட்டுக் கம்பனியொன்றுக்கு அரசாங்கம் குத்தகைக்கு வழங்கியுள்ளதுடன், கிளர்ச்சியினால் பாதிக்கப்பட்ட பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு மற்றும் சில காணித்துண்டு களையும் அரசாங்கம் வழங்கியுள்ளது. மீள்குடியேறிய பிரதேசங்களில் ஆயுதப்படையின் உறுப்பினர்கள் உட்பட பல்வேறு குழுக்களினால் பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாவதாக சாட்டுதல் செய்கின்றனர். அதிகளவு எண்ணிக்கையிலான இளம் ஆட்கள் கைதுசெய்யப்படுவதுடன், அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் இனங்காணப்படாத இடங்களில் பல மாதங்களாகத் தடுத்துவைக்கவும் பட்டுள்ளனர். தடுப்புவைப்பிலிருந்து திரும்பிவந்துள்ள சிலர், சட்ட அமுலாக்கல் அதிகாரிகளினால் பட்டினி, தூக்கத்தை இல்லாதுசெய்தல் மற்றும் ஏனைய கொடுமைப்படுத்தல்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர். தமது உறவினர்களைத் திருப்பியனுப்புமாறு கோரிக்கை விடுத்து, கைதுசெய்யப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் தொடர்ந்தும் ஆட்சேபனையின் ஈடுபட்டுவருகின்றனர்.

சட்டம் தாமதமாகுதல் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றில், ரொவானாவில் குடியியல், குற்றவியல் மற்றும் பகிரங்க வழக்கு நடவடிக்கைகளில் நீதிமுறைத் தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முறையே 25, 15 மற்றும் 07 ஆண்டு காலப்பகுதி சராசரியாகத் தேவைப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான முக்கிய ஆவணங்கள் அனைத்துக்கும் ரோவானா ஓர் அரசுத் திறமாகும் என்று கருதிக்கொள்க.

ரொவானாவினது மனித உரிமைகள் நிலவரத்தை பகுத்தராய்கின்ற விபரமான அறிக்கை ஒன்றினைத் தயார் செய்க.

(34 புள்ளிகள்)

2. "மனித இனத்தின் இரண்டு உள்ளார்ந்த நற்பண்புசார் மனித நேர்நெறியை அடிப்படையாகக் கொண்ட, நீதியை விரும்புவதும் அநீதியை எதிர்க்கும் மனித யதார்த்தமானது, ஓர் அரசியல் எண்ணக் கருவாகவிருந்து சட்டமுறை விதிகளாகியுள்ள மனித உரிமைகள் கருத்தேற்பின் பரிணாமமானது தெளிவானதொரு சான்றாகும். இவ்வுலக வாழ்வு அனுகூலங்களின் பொருட்டு அவற்றை எவரும் விட்டுக்கொடுக்க விரும்பமாட்டார்கள். இந்த அனைத்துலக உண்மைக்கு எதிரான சவால்கள் காலத்துக்குக்காலம் எதிர்கொண்டுவந்தாலும், ஏனைய அனைத்து சக்திகளுக்கும் மேலாக மனிதாபிமானத்தின் வெற்றியை நாம் நேரில் காணுகின்றோம்."

மனித உரிமைகளின் விதிமுறையான வளர்ச்சியுடன் குறிப்பாகத் தொடர்புபடுத்தி மேலுள்ள கூற்றினை ஆராய்க.

(22 புள்ளிகள்)

3. ரோனா என்ற அரசில் ஒருபால் திருமணமானது சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. விரைவில் திருமணஞ்செய்துகொள்ள எண்ணியுள்ள நீனா மற்றும் சாமா ஆகிய இருவரும் தமது திருமணத் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு 'மெரி' என்ற பிரபல்யமான திருமண ஏற்பாட்டாளரைச் சென்று காணுகின்றனர். எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு எந்தவொரு நேர ஒதுக்கீடுகளும் கிடையாது என்று மெரியிலுள்ள வரவேற்பாளர் தெரிவிக்கின்றார். தமது இந்த அனுபவத்தினால் விரக்தியடைந்த அவர்கள் வழக்கறிஞர் ஒருவருடன் ஆலோசனை செய்வதுடன், சட்டத்துக்கு முன்னால் சமத்துவத்துக்கும் சமமான நடாத்துகைக்குமான உரிமை என்பது அரசிற்குரிய சட்டக்கடப்பாடகுமே தவிர அரசுசாரா செயற்பாட்டாளர்களுக்கு அத்தகையதொரு கடப்பாடொன்றாக மாட்டாது என்று வழக்கறிஞர் அவர்களுக்குத் தெரிவிக்கின்றார். வழக்கறிஞரின் ஆலோசனையில் அதிருப்தியடைந்த அவர்கள் உம்முடைய அபிப்பிராயத்தைப்பெற ஆலோசனை செய்கின்றனர்.

இதன் பின்னணியில் ஏற்புடையதான, சமத்துவத்துக்கான உரிமை மற்றும் பாரபட்சத்திலிருந்தான சுதந்திரம் என்பவற்றை பகுத்தராய்கின்ற அபிப்பிராயம் ஒன்றினை எழுதுக.

(22 புள்ளிகள்)

4. நியோன் என்ற நாட்டில் கடந்த இரண்டு மாதகாலமாக பகிரங்கக் கட்டிடங்கள் மீது தொடர்ச்சியானதோர் ஆயுதத் தாக்குதல் பெண் தற்கொலைக் குண்டுதாரிகளால் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. நியோனிலுள்ள சிறுபான்மை மத அடிப்படைவாதக் குழுவொன்றைச் சேர்ந்த பெண்களாயிருப்பார்கள் என்று அவர்கள் சந்தேகிக்கப்படுகின்றனர். பின்வருகின்ற நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தி அத்தகைய தாக்குதல்களுக்கு நியோன் அரசாங்கமானது பதிலளிக்கின்றது:

(அ) தமது முழு உடலையும் அல்லது முகத்தை மறைத்து பகிரங்க இடங்களில் எந்தவொரு பெண்ணும் நடமாடக்கூடாது;

(ஆ) எந்தவொரு மத நிறுவனங்களிலும் வாரத்துக்கு ஒரேயொரு சந்திப்பு மாத்திரம் இடம்பெறலாம் ; மற்றும்

(இ) ஆயுதத் தாக்குதல் மேற்கொள்பவர்கள் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட ஆட்களை நீதிமுறை இடையீடின்றி மூன்றுவாரங்களுக்கு தனிமையாக தடுத்துவைக்கப்படுகின்றனர்.

தடுத்துவைக்கப்பட்ட பெண்களில் பலர் இப்போது காணாமல் போயுள்ளனர் என்று பெண்களுக்கான அமைப்பென்று கோருகின்றது.

நியோன் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் பெண்களுக்கான நிறுவனத்தின் சாட்டுதல் என்பவற்றைப் பகுத்தாராய்க.

(22 புள்ளிகள்)

5. "மனித உரிமைகள் ஆவணமொன்றின் கீழான அதன் கடப்பாடுகளை அரசொன்று நிறைவேற்றுவதனை கண்காணிப்பதற்குப் பிரதானமாக வடிவமைக்கப்பட்டிருப்பதே அறிக்கையிடும் நடபடிமுறையாகும். அரசாங்கக் கொள்கைகளின் பகிரங்க நுண்ணாய்வு மற்றும் பொருத்தமான கொள்கைகளின் ஒழுங்கமைப்பு, அமுலாக்கம் மற்றும் மீளாய்வு என்பவற்றில் சமுதாயத்தின் பல்வேறு துறைகளும் ஈடுபடுவதனை ஊக்குவித்தல் என்பன அறிக்கையிடும் நடபடிமுறையின் குறிக்கோள்களிலொன்றாகும்."

பொருத்தனை அமைப்புக்களுக்கு இலங்கையினது பருவகால அறிக்கைகயிடல் தொடர்பிலான குறைந்தபட்சம் இரண்டு உதாரணங்களைப் பயன்படுத்தி ஆராய்க.

(22 புள்ளிகள்)

6. "மனசாட்சி, மதம் மற்றும் ஏதேனும் நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்துக்கான உரிமையை உத்தரவாதஞ் செய்வதற்கான கடப்பாடானது, அதனுடைய அனைத்துலக மற்றும் தனித்துவச் சிறப்பியல்புகள் காரணமாக அரசுகளுக்கு பலமான சவால் ஒன்றை ஏற்படுத்துகின்றது. இந்த விடயமானது, தனிநபர் உரிமைகளானவை, பலராலும் நம்பப்படுவது போன்று, குழு உரிமைகளின் தேவைகளுக்கு விட்டுக்கொடுப்பதன் காரணமாக மேலும் சிக்கலாகின்றது."

தெரிவுசெய்யப்பட்ட இரண்டு நாடுகளின் உதாரணங்களின் பின்னணியில் மேலுள்ள கூற்றை நுணுக்கமாக ஆய்ந்துரைக்க.

(22 புள்ளிகள்)

************************

# UNIVERSITY OF COLOMBO, SRI LANKA

# FACULTY OF LAW

# BACHELOR OF LAWS EXAMINATION, YEAR IV – 2018

## HUMAN RIGHTS LAW

(Three Hours)

Total Number of Questions: 06

Answer **FOUR** questions **ONLY** selecting question **No.1** and any other **THREE** questions.

(Candidates will be penalized for illegible handwriting)

---

1. Due to a prevailing drought, farmers in the southern province of the State of Rowana have been compelled to discontinue farming. The drought has continued for several years, and babies born during this period are reportedly undernourished. Due to the lack of an income, farmers are unable to provide necessary food and health care to their children. The implementation of relief measures on the part of the government is very slow as the documents demanded by the officers from the farmers in support of their claims for relief are not submitted in time.

   Meanwhile, as a result of continuous social media propaganda, some members of the majority ethnic community in Rowana, *Muga* decide to boycott the business outlets owned by the minority ethnic community, *Suga*. The *Muga* allege that the *Suga* practice of animal sacrifice in temples is against the country's traditions. During a religious festival, an individual of *Muga* ethnic origin, an advocate of 'clean culture' of Rowana, made an inflammatory speech urging all *Muga* men to drive out the *Sugas* from their villages. Within a few hours, there are reports of attacks against *Sugas*, their homes and their businesses. The government of Rowana responds by imposing a state of emergency and blocks access to all social media platforms. In a few weeks' time, a bill is tabled in parliament to establish a 'Social Media Authority' with a mandate to ensure that social media platforms are not 'abused' to undermine national security, public order or morality.

In the eastern province of Rowana, an armed group has been attempting to overthrow the government. Women have been demanding the return of land that has been taken over by the government and declared them as high security zones. Some of these plots of land are leased out by the government to a foreign company to establish an export processing zone and some other plots are handed over to women headed families affected by the insurgency. Women of the resettled areas allege sexual violence by various groups including members of armed forces. Young people are arrested in large number and detained for several months in unidentified locations within the high security zones. The few who returned from detention speak of starvation, sleep deprivation and other ill-treatment at the hands of the law enforcement authorities. Family members of those arrested engage in protests demanding the return of their kith and kin.

A report prepared by the Parliamentary Select Committee on Laws Delays concludes that the average time taken for adjudicating civil, criminal and public law cases in Rowana is a minimum of 25, 15 and 7 years respectively.

Assume that Rowana is a party to all major international human rights instruments.
Write a detailed report analysing the human rights situation in Rowana.

(34 marks)

2. "The evolution of the concept of human rights from a political notion to normative rules is clear proof of the fact that desiring justice and resisting injustice on the basis of human reason are two inherent qualities of human beings. No one would be willing to compromise them for the sake of mundane benefits. Although challenges have been posed to this universal truth from time to time, what we witness is the triumph of humanity above all the other forces."

Discuss the above statement with particular reference to the normative development of human rights.

(22 marks)

3. In the state of Rona, same sex marriage is recognised by law. Nina and Sama who intend to get married soon, visits a prominent wedding organiser 'Marry' to discuss their wedding plans. The receptionist at Marry informs them that no appointments are available for the next three months. Nina and Sama have the same experience when they visit several other wedding organisers. Frustrated by their experience they consult a lawyer who informs them that the right to equality and equal treatment before the law is a legal obligation only on the part of the State and that non-state actors do not have such an obligation. Dissatisfied with this lawyer's advice, they consult you for an opinion.

   Write the opinion, analysing the right to equality and freedom from discrimination as applicable in this context. (22 marks)

4. A series of armed attacks are carried out by women suicide bombers in public buildings in Neon over a period of two months. They are suspected to be women belonging to a fundamentalist religious minority group in Neon. The government of Neon responds to the attacks by introducing the following measures:
   a) No woman can move around in public covering the whole body or the face;
   b) Only one meeting can be held in any religious institution per week; and
   c) Persons arrested on suspicion of carrying out an armed attack are committed to solitary confinement without judicial intervention for three weeks.

   A local women's organization claims that many women that have been arrested are now missing.

   Analyse the measures introduced by the Neon government and the allegation of the women's organization.

   (22 marks)

5. "The reporting procedure is designed principally to facilitate the monitoring of a State's performance of its obligations under a human rights instrument. One of the main objectives of the reporting procedure is to facilitate public scrutiny of government policies and to encourage the involvement of the various sectors of society in the formulation, implementation and review of the relevant policies."

   Discuss using at least two examples from periodic reporting by Sri Lanka to treaty bodies.

   (22 marks)

6. "The obligation to guarantee the right to freedom of conscience, religion and any belief poses a real challenge to the States as to its universal and individual characteristics. The issue is further compounded by the fact that individual rights, as believed by many, give into the demands of group rights."

Critically analyse the above statement in light of two chosen country examples.

(22 marks)

**************